போது

# தனி அலுவலர், கோட்டமடுகு ஊராட்சி மற்றும் தளி, வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களின் செயல்முறைகள்

**முன்னிலை : திரு.அ.சீனிவாசசேகர்**

ந.க.எண்: மபிஒ 2/2018/கோட்டமடுகு

நாள்: 15 .05.2019.

பொருள்: மனைப்பிரிவு ஒப்புதல் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை - தளி ஊராட்சி ஒன்றியம் - கோட்டமடுகு ஊராட்சி மற்றும் கிராமம் - புல எண்கள்: 359/4, 359/5, 360/1, 360/2, 370A/1C மற்றும் 370A/1D - பரப்பு 6.32 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவு - சாலைகள், பூங்கா மற்றும் திறவிடப்பகுதிகள் தானமாகப் பதிவு செய்துள்ளது - ஒப்புதல் வழங்கி ஆணையிடல் - தொடர்பாக.

பார்வை : 1.தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1997 - கட்டிட விதிகள்.

2.சார்பதிவாளர், தேன்கனிக்கோட்டை ஆணவப் பதிவு எண்: 2634/2018, நாள்: 09.05.2018.

3.நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), தருமபுரி மண்டலம், தருமபுரி அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.590/2018/தம நாள்: 21.08.2018.

4.நசீர் அகமது என்பவரின் விண்ணப்பம் நாள்: 25.02.2019.

5.கோட்டமடுகு ஊராட்சி மன்றத் தீர்மானம் எண்: 6 நாள்:05.03.2019.

**ஆணை:**

-----------------

தளி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கோட்டடகு ஊராட்சி மற்றும் கிராம புல எண்: 359/4, 359/5, 360/1, 360/2, 370A/1C மற்றும் 370A/1D-இல் 6.32 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில், திரு.திப்பு நசீர் அகமது, தேன்கனிக்கோட்டை என்பரால் அமைக்கப்பட்டுள்ள 119 மனைகள் மற்றும் 3 கடைகள் கொண்ட குடியிருப்பு மனைபிரிவிற்கு பார்வை(3)-இல் காணும் தருமபுரி மண்டல நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) அவர்களால் அனுமதிக்கப்பட்டுள்ள ஆணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குபட்பட்டும், கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டும் மேற்படி வீட்டு மனைப்பிரிவு வரைப்படத்திற்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

## நிபந்தனைகள்

1. மனைப்பிரிவில் அமைந்துள்ள மனைகள் நீர்நிலைகள், அரசு புறம்போக்கு, திறந்தவெளி ஒதுக்கீடு, அடுத்த நிலத்திற்கு வழியாக அமையும் காலிமனை, உத்தேச சாலை மற்றும் Rail Corridors, பொது பாதை மற்றும் நில உச்சவரம்பு சட்டத்தின்படி உள்ள மனையிடம், அதிக உயர்மின்னழுத்த பாதை கீழ் அமைந்திருக்க கூடாது.
2. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), தருமபுரி மண்டலம், தருமபுரி அவர்களின் நடவடிக்கைகள் மனைப்பிரிவு ம.வ./ந.ஊ.து.இ.(த.ம) எண்:94/2018, கோப்பு ந.க.எண்: 590/2018/தம நாள்: 21.08.2018-இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் தவறாமல் பின்பற்றப்பட வேண்டும்.(நகல் இணைக்கப்பட்டுள்ளது).
3. தானப்பத்திரத்தில் எழுதி ஒப்படைக்கப்பட்ட நிலையில் எவ்விதமான கட்டுமானங்கள் அமைப்பதோ அல்லது விற்பனை செய்வதோ கூடாது.

4. மனைப்பிரிவில் மின்வாரிய விதிமுறைகளின் படி நடப்படும் மின் கம்பங்களுக்கு உரிய தொகையினைக் கணக்கிட்டு மனைப்பிரிவு உரிமையாளரே மின்வாரியத்திற்கு செலுத்தி தெரு விளக்குகள் அமைத்திடல் வேண்டும் அல்லது ஊராட்சிக்கு செலுத்தி பிறகால பராமரிப்பிற்கு ஈடு செய்யப்பட வேண்டும். அதன் பின்னரே மனைப்பிரிவின் தெரு விளக்குகள் ஊராட்சியின் பராமரிப்பில் எடுத்துக் கொள்ளப்படும்.
5. இம்மனைப்பிரிவில் கட்டிடங்கள் கட்டும் போது, கூட்டாகவோ அல்லது தனித் தனியாகவோ ஊராட்சியில் உரிய கட்டணம் செலுத்தி, நீல வரைபட அனுமதி பெறப்படல் வேண்டும்.
6. இம்மனைப்பிரிவின் மனைகள் வாங்கும் மனைக்கு உரிமையாளர்கள் மேற்படி அனைத்து நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுவதாக எழுத்து மூலமாக பத்திரத்தில் ஒப்பந்தம் எழுதி கொடுக்க வேண்டும். இதனை விற்பனைப் பத்திரத்திலும் சேர்த்து பத்திரம் எழுதப்படல் வேண்டும்.
7. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), தருமபுரி மண்டலம், தருமபுரி மற்றும் ஊராட்சியின் தனி அலுவலர் ஒப்புதல் பெறப்பட்ட மனைப்பிரிவு என அனுமதி ஆணைகள் விபரங்கள் குறிப்பிட்டு விளம்பரப் பலகை வைக்கப்படல் வேண்டும்.
8. தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ள சாலைகள், பூங்கா மற்றும் திறவிடப்பகுதிகள் உட்பட அனைத்து இனங்களில் பராமரிப்பு மேற்கொள்ள எதிர் வரும் காலங்களில் பராமரிப்பு மற்றும் இதரக் கட்டணங்கள் செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டால், எவ்விதமான மறுப்புகளும் இன்றி பராமரிப்பு மற்றும் இதரக் கட்டணங்களை மனைப்பிரிவு உரிமையாளரால் ஊராட்சிக்கு செலுத்தப்படல் வேண்டும்.
9. ஒப்புதல் அளிக்கப்பட்ட இம்மனைப்பிரிவில் இத்துறையின் முன் அனுமதியின்றி எவ்விதமான மாறுதலும் மேற்கொள்ளக் கூடாது.
10. இவ்வாணையானது அரசினால் அவ்வபோது வெளியிடப்படும் ஆணைகளின் நெறிமுறைகளுக்கும், விதிமுறைகள் மற்றும் வழிமுறைகளுக்கும் உட்பட்டதாகும்.

15/5/2019

தனி அலுவலர் ,
கோட்டமடுகு ஊராட்சி /
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
ஊராட்சி ஒன்றியம், தளி.

15/5/19

பெறுதல்:
திரு.டி.திப்பு நசீர் அகமது
28, 2வது பைபாஸ் ரோடு,
தேன்கனிக்கோட்டை.

நகல்: நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), தருமபுரி மண்டலம், தருமபுரி அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.